வெருகல் பிரதேச சபை

-------------------------------------

திருகோணமலை மாவட்டம்

-----------------------------------------

1. நிதிக்கூற்றுகள்

-----------------------

1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

------------------------------------------------------

2017 ஆம் ஆண்டிற்கான__ நிதிக்கூற்றுக்கள் 2018 யூன் 19 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 28 ஆம் திகதி தலைவருக்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

--------------------------------------------------

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வெருகல் பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

--------------------------------------------

சபை காசு மற்றும் அட்டுறு அடிப்படைகளில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்திருந்தது. எனினும் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டது என்ற கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

----------------------------------------------

மீளாய்வாண்டின் நீதிமன்ற தண்டப்பணம் காசு மற்றும் அட்டுறு அடிப்படைகளில் கணக்கிடப்பட்டு பதிவுகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே கணக்காய்வின் போது இம்மீதியினை உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது.

1.3.3 செலுத்தவேண்டிய கணக்கு

---------------------------------------------

ரூபா 47,954 கூட்டுத்தொகையான 04 சில்லறைக் கடன்கொடுத்தோர் மீதிகள் கொடுத்துத் தீர்க்கப்படாது கடந்த 10 வருட காலமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

----------------------------------------------------------------

ரூபா 560,600 தொகையான முற்பணப் பெறுவனவு, ஏனைய முதலீடுகள் ஆகியவற்றுக்கான விபரப் பட்டியல் பேணப்படவில்லை. இதனால் கணக்காய்வின் போது மீதியை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

---------------------------------------------------------------------------------------------------------------

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (m) 1988ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதி அத்தியாயம் X பிரிவு 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (M) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணத்தின் பிரிவு 571 | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 215,418 தொகையான கேள்வி, நானாவித மற்றும் பிடிகாசு வைப்புக்கள் நிதிப்பிரமாணத்தின் படி கொடுத்து தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (,) 2006 ஆம் ஆண்டு பெறுகை வழிகாட்டி 5.4.4 பிரிவு 1 | ஒப்பந்தகாரருக்கான முற்பணம் வழங்கப்படும் போது அதி உச்ச தொகையாக ஒப்பந்தத்தொகையில் 20% ஐ முற்பண முறி ஒன்றினைப் பெற்றுக்கொண்டு வழங்க முடியுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சபையினால் இலங்கைத் துறைமுக முகத்துவார செல்லப்பாக்கிய வீதி அமைத்தலுக்கான ரூபா 4,549,788 தொகையான வேலையினை மேற்கொள்ளும் ஒப்பந்தக்காரருக்கு எவ்வித முற்பண முறியையும் பெற்றுக்கொள்ளாமல் ரூபா 600,000 பெறுமதியான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமா்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2017 திசெம்பா் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 4,024,709 ஆக இருந்ததுடன் அதற்கு முன்னைய ஆண்டின் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 1,242,843 ஆக இருந்தமையால் நிதிசாா் விளைவுகளில் ரூபா 2,781,866 முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

(அ) சபையினால் சமா்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், வருமான நிலுவை என்பன தொடா்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | பாதீடு | ஆண்டுக்கான வருமானம் | பெறப்பட்ட வருமானம் | 2017.12.31 இல் நிலுவை | பாதீடு | ஆண்டுக்கான வருமானம் | பெறப்பட்ட வருமானம் | 2016.12.31 இல் நிலுவை |
| | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" |
| வீதவரிகள் | 650 | 17 | 51 | - | 1 | 222 | 222 | 283 |
| வாடகை | 609 | 1,130 | 1,157 | 632 | 361 | 392 | 392 | 256 |
| அனுமதி பத்திர கட்டணம் | 491 | - | 413 | - | 182 | - | 326 | - |
| ஏனையவை | 3,513 | 160 | 2,899 | 1,279 | 3,169 | 140 | 2,448 | - |

2.2.2 முத்திரைத் தீர்வை

2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணத்தை கணிப்பீடு செய்து பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

ஐக்கிய நாடுகளின் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்களின் தலைமையில் 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை எவ்வித அறிவினையும் கொண்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாகாண நிதி ஒழுங்கு விதி இல.163.3 இன் பிரகாரம் முற்பணங்கள் அனைத்தும் 10 நாட்களுக்குள் சீர்செய்யப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 03 தொடக்கம் 10 வருடங்கள் பழமை வாய்ந்த ரூபா 616,216 பெறுமதியான முற்பணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பதிலீட்டு அடிப்படையில் கடமை புரியும் ஊழியர்களுக்கான ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புப் பணத்தை கணிப்பிடும் போது அவர்களின் மொத்தச் சம்பளத்தின் அடிப்படையில் கணிப்பிட வேண்டும். எனினும் 2016 ஆம் ஆண்டில் சபையில் கடமைபுரிந்த 03 பதிலீட்டு அடிப்படை ஊழியர்களின் ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புப் பணமானது அடிப்படைச் சம்பளத்தில் கணிப்பிடப்பட்டு குறைவாக செலுத்தப்பட்ட ரூபா 62,719 தொகையினை இன்றுவரை குறித்த நிதியத்திற்கு சபை செலுத்தியிருக்கவில்லை.

(இ) அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் EST-8/UNIFO/06/0302/6 ஆம் இலக்க 2013 ஏப்ரல் 22 ஆம் திகதிய சுற்று நிருபத்தின் 2ஆம் பந்தியின் (அ) பிரிவின் பிரகாரம், தாபன விதி கோவையின் XXI அத்தியாயத்தின் படியும், அதன் தொடர்பில் வெளியிடப்பட்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகளின் படியும் வழங்கப்பட்ட சீருடைத்துணிகள் மற்றும் தையல் கட்டணங்களுக்கு பதிலாக சாரதிகளுக்கும், அலுவலக உதவியாளர் சேவையில் இருக்கும் அலுவலகர்களுக்கு 2013 சனவரி 01 திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் ஆண்டு தோறும் ரூபா 4,000 பணமாக வழங்கப்பட வேண்டும். எனினும் சபையினால் இதுவரை காலமும் சீருடைக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருக்கவில்லை.

3.3 சொத்து முகாமைத்துவம்

3.3.1 சொத்துக்களைப் பதிதல்

ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட 06 வாகனங்கள் ஆறு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் அவற்றை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.3.2 பயன்படுத்தப்படாமலுள்ள சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபைக்கு சொந்தமான ரூபா 2,272,800 பெறுமதியான 07 அறைகளைக் கொண்ட கடைத்தொகுதியானது 2011 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதிவரை எத்தேவைக்கும் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படுகின்றது.

(ஆ) சபையில் காணப்படும் ரூபா 1,451,750 மொத்தப் பெறுமதியான உழவு இயந்திரம், இரண்டு சக்கர உழவு இயந்திரம், ரோட் ரோலர் மற்றும் முச்சக்கர வண்டி என்பன நான்கு வருட காலமாக பயன்படுத்தப்படாது காணப்பட்ட போதிலும் அவற்றை திருத்தி பயன்படுத்துவதற்கோ அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.3.3 வருடாந்த இருப்பு கணிப்பீடு

2017 ஆம் ஆண்டின் இருப்புக் கணக்கெடுப்பின் போது சபையினால் பராமரிக்கப்படும் நூலகத்தில் 602 புத்தகங்கள் பற்றாக்குறையாகக் காணப்பட்டமை சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் அவை தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.4 பெறுகை நடைமுறைகள்

3.4.1 பெறுகைத் திட்டம்

தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் 128 ஆம் இலக்க 2006 மார்ச் 24 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பெறுகை திட்டம் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

3.4.2 ஒப்பந்த நிர்வாகம்

3.4.2.1 சூரிய சக்தி விளக்கு திருத்தம்

புறநெகும செயற்திட்டத்தின் கீழ் 2014 யூன் 30 ஆம் திகதி பொருத்தப்பட்ட ரூபா 7,743,120 பெறுமதியான 80 சூரிய சக்தி விளக்குகளும் பழுதடைந்திருந்தமை காரணமாக அதில் 65 விளக்குகள் பிரதேச சபைகளை வலுவூட்டும் வேலைத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 2,731,000 தொகையில் திருத்தம் செய்வதற்கான ஒப்பந்தம் 2017 ஒக்தோபர் 27 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பான கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) பெறுகை வழிகாட்டியின் பிற்சேர்க்கை (Supplementary) 2014 யூலை 04 ஆம் திகதிய 28 ஆம் இலக்கத்தின் பிரகாரம் வாங்குதல் நடைமுறை சபையினால் ரூபா 2,000,000 தொகை வரையே மேற்கொள்ள முடியும். எனினும் இதற்கு முரணான வகையில் இவ்வேலைத்திட்டத்திற்கு வாங்குதல் நடைமுறை பின்பற்றப்பட்டிருந்தது. இதனால் பெறுகை வழிகாட்டியின் 1.2.1 (II) இற்கான நோக்கம் அடைப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இத்திருத்த வேலைக்கான உடன்படிக்கையில் தொடர்ச்சியான பராமரிப்பு தொடர்பாக எவ்வித விடயங்களும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் விளக்குகள் பழுதடையும் போது மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்பட்டே திருத்த வேண்டிய நிலை ஏற்படும்.

(இ) திருத்தம் செய்யப்பட்ட 65 விளக்குகளில் ரூபா 847,400 பெறுமதியான 19 விளக்குகள் முழுமையாக இயங்காமலும் ரூபா 892,000 பெறுமதியான 20 விளக்குகள் குறைந்த நேரம் இயங்குபவையாகவும் காணப்படுகின்ற போதிலும் சபையினால் அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.4.2.2 கேட்போர் கூடம் நிர்மாணம்

---

மாகாண சபை மற்றும் உள்@ராட்சி அமைச்சின் பிரதேச சபைகளை வலுவூட்டும் தேசிய வேலைத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் கேட்போர் கூடம் நிர்மாணம் செய்வதற்கான ஒப்பந்தம் ரூபா 6,749,486 தொகைக்கு 2017 நவம்பர் 17 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெறுகை வழிகாட்டியின் பிரிவு 3 இன் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் குறைவான ஒப்பந்தக்காரர் காணப்படுகின்ற போது மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட தேசிய கேள்வி (LNCB) கோரப்பட முடியும். எனினும் அதிகளவான ஒப்பந்தக்காரர்கள் காணப்பட்ட போதிலும் பெறுகை நிறுவனம் தேசிய போட்டி முறை (NCB) மூலம் கேள்வி கோரப்படாது மட்டுப்படுத்தப்பட்ட தேசிய கேள்வி முறை (LNCB) மூலம் கோரப்பட்டமையால் பெறுகை வழிகாட்டியின் பிரிவு 1.2.1 (ஈ) இன் நோக்கம் அடையப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒப்பந்தக்காரரின் கேள்வித் தொகை கணக்கீட்டுத் தவறுகளைத் திருத்திய பின்னர் ரூபா 7,248,750 தொகையாக காணப்பட்ட போதிலும் இத்தொகையினைக் கருத்தில் கொள்ளாது ரூபா 6,749,486 தொகைக்கே சபையினால் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(இ) மதிப்பீட்டுத் தொகையை விட ஒப்பந்தக்காரரின் தொகை ரூபா 1,793,814 தொகையால் குறைவாக காணப்பட்டிருந்தமையால் தொழில்நுட்பப் பகுப்பாய்வுக் குழு பெறுகை வழிகாட்டியின் 7.9.11 இன் பிரகாரம் நடைமுறைகளை மேற்கொள்ளாது ஒப்பந்தத்தை வழங்குவதற்கு பரிந்துரை செய்திருந்தது.

(ஈ) மதிப்பீட்டுத் தொகையை விட ஒப்பந்தக்காரரின் தொகை ரூபா 2,406,590 தொகையால் அதிகமாக காணப்பட்டிருந்தமையினை தொழில்நுட்பப் பகுப்பாய்வுக் குழு கருத்தில் கொள்ளாது ஒப்பந்தத்தை வழங்குவதற்கு பரிந்துரை செய்திருந்தது.

(உ) ரூபா 785,000 பெறுமதியான கீழ் குறிப்பிடப்பட்ட வேலைகள் கணக்காய்வுத் திகதியான 2018 மார்ச் 23 ஆம் திகதி வரை முற்றாக செய்யப்படாதிருந்த போதிலும் மாகாண சபைகள் மற்றும் உள்@ராட்சி அமைச்சிடமிருந்து கட்டுநிதியைப் பெறுவதற்காக அவ்வேலைகள் செய்யப்பட்டதாக கணியச்சிட்டையினை பொறுப்பான தொழில்நுட்ப உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தி குறித்த அமைச்சுக்கு அனுப்பியிருந்தது.

(ஊ) இவ்வேலை 2018 சனவரி 12 ஆம் திகதி ஒப்பந்தக்காரரால் நிறைவு செய்யப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருத்தல் வேண்டும். எனினும் கணக்காய்வுத் திகதியான 2018 யூலை 12 ஆம் திகதியன்று 76 வீதமான வேலைகள் நிறைவு செய்யப்படாதிருந்த போதிலும் ஒப்பந்தக்காரரிடமிருந்து ரூபா 674,948 தொகையான தாமதக்கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

---

1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதி அத்தியாயம் VII பிரிவு 168(1) இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எனினும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 02 மாதகால தாமதத்தின் பின்னர் 2018 யூன் 19ஆம் திகதியே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 8% தொடக்கம் 93% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் ஆதனவரி மதிப்பீடுகள் செய்யப்படாமல் இருந்த போதிலும் ரூபா 650,000 தொகை எதிர்பார்க்கப்பட்ட வருமானமாக பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) பேரேடுகள் நாளது வரையாக முறையாக பேணப்படுதல். |
| | (ii) சொத்துக்கள் செலவீனங்களின் தன்மை அடிப்படையில் வகைப்படுத்தப்படுதல். |
| | (iii) கடன்பட்டோர், கடன் கொடுத்தோர் பேரேடுகளைப் பேணப்படல். |
| (ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | (i) நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல். |
| | (ii) களஞ்சியப் பேரேடு முறையாகப் பேணப்படல். |
| (இ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல். |
| (உ) ஒப்பந்த முகாமைத்துவம் | ஒப்பந்தங்கள் வழங்கப்படும் போது பெறுகை வழிகாட்டி மற்றும் நிதி ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்கள் பின்பற்றப்படுதல். |